ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் செயல்முறைகள், சென்னை–5.
முன்னிலை: திரு சு.பார்த்திபன்,B.Sc.,

ந.க.எண். இ6/2232/2024 நாள்.04.04.2024.

பொருள்: பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் – தட்டச்சர் திரு.மூ.கந்தன் என்பவரது தகுதிகாண்பருவம் நிறைவு செய்து ஆணையிடுதல்–தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (ப) எண்.170 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–7) துறை நாள்.05.09.2022.
2. அரசு கடித எண். 407/ஆதிந 7(1)/2024–1, நாள். 02.03.2024.

*****

<u>ஆணை:</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திரு.மூ.கந்தன் என்பவரது பணியானது பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி 31.01.2022 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், பார்வை –2இல் காணும் அரசு கடிதத்தில் திரு.மூ.கந்தன் என்பவருக்கு தட்டச்சர் நிலையில் தகுதிகாண் பருவம் விளம்பிட விதித் தளர்வுகள் ஏதும் இல்லாத நிலையில், தனியர் துய்த்துள்ள ஈட்டிய விடுப்பு போக (13.02.2023 முதல் 22.02.2023 வரை 10–நாட்கள் மட்டும) இயல்பாக இரண்டாண்டு காலம் பணி முடிக்கும் நாளான 11.02.2024 அன்று பிற்பகல் உரிய நியமன அலுவலரே தகுதிகாண் பருவம் விளம்பி ஆணைப் பிறப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திரு.மூ.கந்தன் என்பவர் தமது தகுதிகாண் பருவ காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டிய தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால், நடத்தப்படும் கணினி அலுவலகத் தானியங்கல் சான்றிதழ் (Certificate Course in Computer on Office Automation) தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதால், இரண்டாண்டு காலம் பணி முடிக்கும் நாளான 11.02.2024 அன்று பிற்பகல் தட்டச்சர் பதவியில் தகுதிகாண்பருவம் நிறைவு செய்து ஆணையிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

பெறுநர்.
திரு.மூ.கந்தன்,
தட்டச்சர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை–05.

நகல்.

1. அரசு செயலாளர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
   நலத்துறை, தலைமைச் செயலகம்,
   சென்னை–9.
2. "இ5" இருக்கைக்கு.
3. முக்கிய ஆவணத் தொகுப்பு.